STC 20/2020 27.12.2024

எ.சா.1 பங்கஜவள்ளி

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) நான் பொள்ளாச்சி திவான்சாபுதுர் அரசு மேல்நிலைப் பள்ளியில் எத்தனை ஆண்டுகள் ஆசிரியராக பணிபுரிந்தேன் என்றால் 5 ½ வருடங்கள் ஆசிரியராக பணிபுரிந்தேன். எனக்கு பொதுவாக வங்கி நடைமுறைகள் தெரியும். என்னிடம் காட்டப்படும் காசோலை பு.சா.ஆ.1 என்னுடைதுதான். நான் எனது முதல் விசாரணையில் கஜேந்திரனுக்கு கொடுத்த காசோலையில் அவரே கையொப்பம் செய்து கொண்டார் என்று குறிப்பிட்டுள்ள நிலையில் அது சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. ஏனென்றால் நான் ராமகிருஷ்ணன் என்ற ஆசிரியர் வாங்கிய கடனுக்கு செந்தில்குமாரிடம் ஆதரவிற்காக கொடுத்திருந்தால் நான் செந்தில் குமார் என்ற ஆசிரியரிடம் போய் என் காசோலை எப்படி போனது யாரிடம் கொடுத்தீர்கள் என்று கேட்டேன். நான் செந்தில்குமாரிடம் என்ற ஆசிரியரிடம் காசோலை கொடுக்கவில்லை நான் எனது தனிப்பட்ட குடும்ப செலவிற்காக பணம் கடன் வாங்கிக்கொண்டு ஆதரவிற்காக காசோலை கொடுத்துவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு கஜேந்திரன் யார் ? என்றே தெரியாது.

(2) நான் பாபு என்பவரிடம் கொடுத்த மற்றொரு காசோலையைக் கொண்டு என் மீது இன்னொரு காசோலை வழக்கு உடுமலை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அதன் எண்., காசோலை தொகை எவ்வளவு என்றால் காசோலை வழக்கு எண். தெரியவில்லை. தொகை ரூ.60 ஆயிரம் ஆகும். மேற்படி ஆதரவிற்காக காசோலை வசூலக்கு தாக்கல் செய்யப்பட்டால் பணமாக்க வேண்டாம் என்று **stop payment** அறிவிப்பு வங்கிக்கு கொடுத்தேனா என்றால் இல்லை. நான் கஜேந்திரனிடம் வாங்கிய கடனை தீர்க்க வேண்டி காசோலை கொடுத்துவிட்டு இந்த வழக்கில் நான் பொய்யாக செந்தில்குமார் என்பவரிடம் ஆதரவிற்காக காசோலைகளை கொடுத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் உண்மையாக செந்தில்குமாரிடம் ஆதரவிற்காக காசோலைகளை கொடுத்திருந்தால் வங்கியில் உரிய

முறையில் **stop payment** கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.12.27 11:45:33 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்